Registered as a News paper in Ceylon விலை சதம் 10

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
ரப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [21-6-67] இதழ் 130
பிலவங்க ஆனி 7 ரபி அவ். 12 புதன்கிழமை

ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
மீலாத்
வாழ்த்துக்கள்
கே. என். எம்.
மீறுன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்
போன்: 585

# மகாவலிகங்கைத் திட்ட அமுல் 11 பேர் கொண்ட குழு ஆராயும்

## 10 பெரிய நீர்த் தேக்கங்கள் அமைக்கப்படும்

கொழும்பு செவ்வாய்

மகாவலிகங்கையை திருப்புவதற்கான திட்டத்தை அமுல்செய்வதுபற்றி ஆராய்வதற்கு பதினொரு அங்கத்தவர்களைக்கொண்ட குழுவொன்றை காணி நீர்ப்பாசன அமைச்சர் நியமித்திருக்கிறார்.

மகாவலிகங்கையைத் திருப்பும் திட்டம் பற்றியும் அதை எத்தனை கட்டங்களாக அமுல்செய்யலாம், எந்தக் கட்டங்களை முதலில் ஆரம்பிப்பது, இதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்பது பற்றி இக் குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும். மகாவலிகங்கைத் திட்டத்தை அமுல்செய்யும்பொழுது பத்துப் பெரிய நீர்த்தேக்கங்கள் அமைக்கப்படும் அம்பன் கங்கா பகுதியில் அணை ஒன்று கட்டப்படும். இந்த அணையின் மூலம் பொலனறுவை, மின்னேரியா, கந்தளாய் ஆகிய பகுதிகளில் 73,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசனவசதிகிடைப்பதுடன் 33,000 ஏக்கர் நிலம் புதிதாக பயிர்ச்செய்கைக்குக் கொண்டுவரப்படும். அணைக்கட்டுத் திட்டத்தினல் நீர்வீழ்ச்சி மின்சாரமும் உற்பத்திசெய்யப்படும்.

## வார்தாகல்வி திட்ட நிபுணர் அரியநாயகம் திடீர் மறைவு

### சொந்த ஊரில்வந்து உயிர் நீத்தார்

யாழ்ப்பாணம், புதன்

வார்தா கல்வித்திட்ட அமைப்பாளர்களில் ஒருவரும் காந்திஜியின் சீடரும், கவியரசர் தாகூரின் முன்னைநாள் அந்தரங்கக் காரியதரிசியும் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச்சேர்ந்தவருமான திரு. ஈ. டபிள்யு அரியநாயகம் நேற்று அதிகாலை வட்டுக்கோட்டையில் காலமானர்.

நேற்று முன்தினம் தான் இந்தியாவிலிருந்து தமது மனைவியாருடன் இலங்கைக்குத் திரும்பிவந்து சேர்ந்த திரு. அரியநாயகம் நேற்று அதிகாலை திடீரெனக் காலமானர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவரான திரு. அரியநாயகம் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மாணவர் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றினர். பின்னர் கவியரசர் தாகூரைச் சந்தித்தார். அதைத் தொடர்ந்து அவரின் அந்தரங்கக் காரியதரிசியானர். தாகூருடன் மலேயா மற்றும் பல நாடுகளுக்கும் சென்றார். தாகூரின் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தில் திரு. அரியநாயகம் பேராசிரியராகவும் பணியாற்றினர்.

இச் சமயத்தில் மகாத்மா காந்தி ஆதாரக் கல்வித் திட்டத்தை ஆரம்பித்தார். இதில் திரு. அரியநாயகம் சேர்ந்தார். இந்த ஆதாரக் கல்வித்திட்டத்தை ஒழுங்கு

[8-ம் பக்கம் பார்க்க]

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதா

## கவர்னர் ஜெனரல் சம்மதம் அளித்துவிட்டார்

### நேற்றிலிருந்து சட்டமாகியது

கொழும்பு, செவ்.

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவுக்கு கவர்னர் ஜெனரலின் அங்கீகாரம் கிடைத்துவிட்டதாகவும், இன்று முதல் மசோதா சட்டமாகிவிட்டதாகவும் ஜனப்பிரதிநிதிகள் சபையில் சபாநாயகர் தெரிவித்தார்.

### பார்லிமெண்ட் கலைக்கப்பட்டது

இன்று முதல் பார்லிமெண்டின் கூட்டத்தொடர் கலைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஜூலை மாதம் 8ந் திகதி அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பமாகும். அன்றைய தினம் கவர்னர் ஜெனரல் இரு சபை அங்கத்தவர்களும் அடங்கிய கூட்டத்தில் சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்துவார்,

## செனட்சபைத் தலைவர் ராஜினமா செய்வார்?

கொழும்பு, செவ்வாய்

செனட்சபைத் தலைவர் திரு. ஏ. ரத்னயக்கா தமது ராஜினமா கடிதத்தை கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பிவைக்கக்கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் பலத்த ஹேஷ்யம் நிலவுகின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் மசோதாமீது ஏற்பட்டுள்ள கருத்துவேற்றுமை காரணமாகவே அவர் ராஜினமா செய்யக்கூடும் என்று கருதப்படுகின்றது. செனட்சபையில் இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் மசோதா விவாதிக்கப்பட்ட போது திரு. ரத்னயக்கா தமது எதிர்ப்பை மறைமுகமாகத் தெரிவித்திருந்தார் என்றும் சொல்லப்படுகின்றது.

பருத்தித்துறையில்

## $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கடத்தல்?

### சுங்க இலாகா கைப்பற்றியது

— நமது நிருபர் பழனிப்பிள்ளை —

வல்வெட்டித்துறை, செவ்வாய்

பருத்தித்துறை மணற்காடு கடற்கரையில் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான சேலைகள், வேட்டி, காற்ருடி, தலைப்பட்டிகள் ஆகியவற்றை சுங்க அதிகாரிகளால் நேற்று நள்ளிரவு கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இப்பொருட்கள் யாவும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குகொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் சுங்க கலெக்டர் திரு. பத்திராஜ விமலதர்மாவுக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை கடலில் சுங்க அதிகாரி திரு. ஆர். எஸ். மூர்த்தி தலைமையில் ஒரு கோஷ்டியினர் கடற்படை வள்ளத்தில் ரோந்து செய்து ஒரு வள்ளத்தை துரத்திக்கொண்டும் சுங்க கலெக்டர் திரு பி. விமலதர்மா, காங்கேசன்துறை சுங்க அதிகாரி திரு. எம். வீரசுந்தரம் யாழ்ப்பாண சுங்கஅதிகாரிதிரு. அந்தனிராஜா ஆகியோர் தரை மார்க்கமாகவும் சென்றனராம். தரைமார்க்கமாகச் சென்றவர்கள்சந்தேகத்தின் பேரில் ஒரு காரை பின் தொடர்ந்து துரத்திக்

[8-ம் பக்கம் பார்க்க]

## யாழ். மாநகரசபை தேர்தல் பிரதமர் வந்தபின் முடிவாகும்

### ஆணையாளர்கள் மந்திரியுடன் ஆலோசனை

கொழும்பு, செவ்.

யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ ஆணையாளர்களும், மாநகரசபை ஆணையாளரும் தமது அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பதாக இன்று உள்ளூராட்சி மந்திரி செனட்டர் திருச்செல்வம் நிருபர்களிடம் கூறினர்.

யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ ஆணையாளர்களும், மாநகரசபை ஆணையாளரும் நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டார்கள். அவர்கள் இன்று காலையில் உள்ளூராட்சி மந்திரியைச் சந்தித்துப் பேசினர்கள்.

பிரதம மந்திரி, வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் உடனடியாக இந்த அறிக்கையை அவருடைய கவனத்துக்குசமர்ப்பிக்கப்போவதாகவும், அதன்பிறகு பிரதம

[8-ம் பக்கம் பார்க்க]

## கூட்ட நிகழ்ச்சிகள் தமிழில் நிர்வாக வேலை சிங்களத்தில்

### யாழ் மாவட்ட குழுபற்றி கேள்வியும் பதிலும்

கொழும்பு, செவ்வாய்

யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்புக்குழு கூட்ட நிகழ்ச்சிகள் தமிழிலேயே நடப்பதாகவும்ஆனல்அதன் அறிக்கைகள், கடிதப் போக்குவரத்துகள் போன்ற நிர்வாக வேலைகள் யாவும் சிங்களத்திலேயே நடைபெறுகின்றது என்றும் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யு. தகநாயக்கா இன்று பிரநிதிகள் சபையில் கூறினர்.

திரு. லக்ஸ்மன் ஜயக்கொடியின் கேள்வியொன்றுக்கு மந்திரி பதிலளித்தார். திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் தமிழில் தான் இணைப்புக் குழு கூட்டங்கள் நடக்கின்றனவா? என்று கேட்டபொழுது தமிழில் நடைபெறும் இடங்களில் நிர்வாக வேலைகள் சிங்களத்திலேயே நடைபெறுவதாக மந்திரி கூறினர்.

கிளிநொச்சி எம். பி.யின்

[8-ம் பக்கம் பார்க்க]

### மாரியப்ப சுவாமிகள் காலமானர்

சென்னை, ஜூன் 20

பிரபலசங்கீத வித்வானன மதுரை மாரியப்பசுவாமிகள் நேற்று மாயவரத்தில் காலமானர்.

வாசக நேயர்களுக்கு
எமது
அன்பு கலந்த
மீலாத்
வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

காணி எடுத்தற் சட்டம் அத்தியாயம் [160]
7-ம் பிரிவின் படியான அறிவித்தல்

கடித இல. LB 4049.

கீழிருக்கும் அட்டவணையில் குறிப்பிட்ட காணியை காணி எடுத்தற் சட்டத்தின்கீழ் எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதை இத்தால் பிரகடனப்படுத்துகிறது. முழு விபரங்களையும் 16-6-67-ந் திகதியில் வெளியாகும் 14,753 இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை [III-ம் பாகம்] யில் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டப் பிரிவு: மட்டக்களப்பு.
கிராமத்தின் பெயர்: அமிர்தகழி—வாட் நம். 12 ந.ச.எல்லைக்குட்பட ம.களப்பு.
பட இலக்கம்: பி. பி. மட். 58.
துண்டுகள் இலக்கம்: 1, 2, 3-ம் 4.
காணியின் பெயர்: துண்டு 1—வாடிவளவு.
துண்டு 2—சுவாமியார்வளவு.
துண்டு 3—சபாபதியார் வளவு.
துண்டு 4 மேற்படி

பி. சங்காரவேல்
காணி எடுத்தல் அதிகாரி,
மட்டக்களப்பு மாவட்டம்.
3593

---

குறிப்பு: எல். ஏ/1219

1964-ம் ஆண்டின் 28-ம் இலக்க காணி எடுத்தல் [திருத்தச்] சட்டப்படி, திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் [அத்தியாயம் 460]
7-ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழ்காணும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1967 ஆம் ஆண்டு யூன் மாதம் 16-ம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை இலக்கம், 14,753 பகுதி III இல் பார்க்கவும்.

அட்டவணை

காரியாதிகாரியின் பிரிவு:- யாழ்ப்பாணம்.
கிராமத்தின் பெயர்:- யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் II ஆம் வட்டாரம், பழைய பள்ளிவாசல், சோனக தெரு,
காணியின் பெயர்:- பொம்மைவெளி.
ஆரம்ப பட இல:- யா 113.
துண்டு இல:- 1, 2, 3, 4, 5 ஆகியன.

தி. முருகேசபிள்ளை
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.
3587

## அறிவித்தல்

திரு. V. S. அருளப்பா இளைப்பாறிய R. F. O. பெரியவிளான், இளவாலை எமது பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். தேவையான விபரங்களை அவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அருணா ஏஜென்ஸீஸ்
அளவெட்டி. 1797

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. உமாபதி [இலங்கைவங்கி], உபதலைவர்: திரு. பி. எம். சவரிமுத்து [மக்கள் வங்கி], காரியதரிசி: திரு. கே. என். திருஞானம் [வர்த்தகவங்கி], உபகாரியதரிசி, வி. சகாதேவசங்கரி [கூட்டுறவு மாகாணவங்கி], தனாதிகாரி: திரு. கே. தேவராஜன், உபதனாதிகாரி: திரு. ஜே. ஆரோக்கியநாதன் [வர்த்தகவங்கி].

8 உறுப்பினர்கொண்ட கமிட்டியொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

பொதுகவுன்சில் அங்கத்தவர்களாக திருவாளர்கள் ஆர். சாம்பசிவம், நிமால் ராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## பாடசாலை பெயர் மாற்றம்

சாவகச்சேரி, செவ்.

மட்டுவில் சந்திரமௌலீச சாந்தநாயகி மகாவித்தியாலயதில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர்சங்கக் கூட்டத்தில்வித்தியாலயப் பெயரை மட்டுவில்கந்தர் மகாவித்தியாலயம்எனமாற்றுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## வரி விளம்பரம்

### தேவை

விற்பனையாளர்

யாழ்ப்பாணப் பகுதி சாராயத்தவறணைகளுக்கு இரண்டு விற்பனையாளர் தேவை. தமிழ் S. S. C. சித்தி அடைந்து இருக்க வேண்டும். ரொக்கபிணை ரூபா 1000/- கட்டவேண்டும். அதோடு எங்களுக்கு தெரிந்த பெறுமதியான ஒருவரின் நேர்முகப் பிணையும் வேண்டும். விருப்பமானவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரில் வரவும் S. R. க ் தையா No 10, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 2459

வேலை

ஐரோப்பிய ஸ்தாபனமொன்றில் கணக்குப் பகுதியில் 16 வருடங்கட்குமேல் கடமையாற்றி, வர்த்தகத் துறையில் அனுபவமுள்ளவர், லிகிதர், காஷ்யர், ஸ்ரோர்கீப்பராக அல்லது வான் சேல்சில் கடமையாற்ற விரும்புகிறார். உறுதிப்பிணை கட்டலாம். விபரங்களுக்கு விளம்பர இல/2451 ஈழநாடு, மே/பா த. பெ. எண். 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2451

வல்வெட்டித்துறை, செவ்.

அல்வாய் திக்கம் சைவப் பிரகாச பாடசாலையில் சுகாதாரவிழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பருத்தித்துறை வைத்திய அதிகாரி டாக்டர் அருளம்பலம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். இதற்கான ஏற்பாடுகளை சுகாதார பரிசோதகர் திரு. எஸ். சண்முகம்பிள்ளை செய்திருந்தார்.

### விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 395-ம் இலக்கத்திலுள்ள காணியில் இரண்டு பரப்பு விற்பனைக்கு உண்டு. 2455

தென்னந்தோட்டம்

பூநகரி மெயின் வீதியில், பரம்பன்கிராயிலிருந்து 1 1/2 மைல் தூரத்தில் மேற்குப் பகுதியில் வெட்டுக்காடு என்ற இடத்தில் 23 ஏக்கர் காட்டுடன் கூடிய 30 ஏக்கர் பலனளிக்கும் தென்னந்தோட்டம் [மொத்தம் 53 ஏக்கர்] விற்பனைக்குண்டு. தோட்டம் வரையும் வாகனங்கள் போகக்கூடிய வசதியுள்ளது. விலை மற்றும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். இல. 59, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 2452

## நயினாதீவுக்கு வைத்தியஅதிகாரி

நயினாதீவு, செவ்.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வந்த டாக்டர் வி. ஞானமூர்த்தி நயினாதீவு ஆஸ்பத்திரிக்கு வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நயினாதீவு ஆஸ்பத்திரிக்கு வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு நயினாதீவு கிராமசபை சுகாதார அமைச்சரைக் கோரி வந்ததைத் தொடர்ந்தே புதிய வைத்திய அதிகாரி அங்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




றேடியோ
அம்பிளிபயர்
கிறமபோன் இசைத்தட்டுகள்
இலக்றிக் சாமான்கள்
விற்பனையிலும் திருத்துவதிலும்,
முதல்தர ஸ்தாபனம்
S. சுலைமான் கண்டு&பிறதர்
5-7, மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.

யாழ் சின்னம் பொறித்த
அலுமினிய பாத்திர
உற்பத்தியாளர்கள்
சகல சாமான்களும் கலப்பற்ற அலுமினியத்தினல் உருவாக்கப்பட்டவை என உத்தரவாதப்படுத்தப்பட்டது
நவீன விஞ்ஞான முறையிற்
தங்க, வெள்ளி, குரோமியம், வெள்ளீயம்
ஆகிய முலாம் பூசிக் கொடுக்கப்படும்
யாழ் மெட்டல் இன்டஸ்ரீஸ்
250, 252, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

இலகுவில் எடுத்துச் செல்லக் கூடிய
"பிறஸ் போர்ட்"
தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தைப் பாவித்து
அதிக விளைச்சல் பெறுங்கள்.



ஒரு விவசாயியின் சிறந்த நண்பன் அவனுடைய பிறஸ்போர்ட் தண்ணீர் இறைக்கும் இயந்திரம்தான். வெகு சிக்கனமாக அவனுடைய பயிர்வகைகளுக்கு இந்த இயந்திரம் தண்ணீர் இறைத்துக் கொடுக்கிறது. விவசாயத்துக்கு முக்கியமாகத் தேவைப்படும் தண்ணீர் பிறஸ்போர்ட் இயந்திரத்தின் மூலம் தங்குதடையின்றிப் பாயும். நீண்ட நாட்களுக்கு திருத்தம் எதுவும் செய்யவேண்டிய அவசியமின்றி உழைக்கத் தக்கதாக உருவாக்கப்பட்டுள்ளது.

கடினமான வேலையைச் செய்வதற்கென்றே தயாரிக்கப்பட்ட "பிறஸ்போர்ட்" தண்ணீர் இயந்திரங்கள் சேறு நிறைந்த நீரையும் இலகுவாக இறைக்கும் சக்தி கொண்டவை.

அணைக்கட்டுகள், குளங்கள், ஆறுகள், வாவிகளிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு இந்த இயந்திரங்கள் முதன்மை வாய்ந்தவை.

சிறந்த விவசாயி ஆகவேண்டுமானல் "பிறஸ்போர்ட்" வாங்குங்கள்.

சாமுவேல் சன்ஸ்
அன்ட் கம்பெனி லிமிட்,
கொழும்பு — யாழ்ப்பாணம் — கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ. நா. மகாசபையில்

# கொஸிஜின், குரோமிக்கோ வெளிநடப்பு

## சோவியத் யூனியனை வன்மையாக தாக்கினர் இஸ்ரேல் மந்திரி

ஐ.நா. நியுயோர்க், ஜூன் 20

**ஐ.நா.மகாசபை விவாதத்தின்போது நேற்று சோவியத் பிர்தமர் திரு. கொஸிஜின், வெளிவிவகாரமந்திரி திரு.குரோமிக்கோ வெளிநடப்புச்செய்தனர். இஸ்ரேல் வெளிவிவகார மந்திரி எபானின் சூடான பேச்சை தொடர்ந்தே இவர்கள் வெளிநடப்புச்செய்தனர்**

மேற்கு ஆசியாவின் விவகாரம்பற்றிநேற்று ஐ, நா. மகாசபையில் விவாதிக்கப்பட்டது. சோவியத்யூனியன் போக்கைக் கண்டித்தும், தாக்கியும் இஸ்ரேல் மந்திரி எபான் பேசினுர். திரு. எபான் ஆவேசமாகவும், உணர்ச்சியுடனும் பேசிக்கொண்டிருந்தபோது திரு. கொஸிஜின், திரு. குரோமிக்கோ சபையைவிட்டுவெளியேறினர்.

### சோவியத் தீர்மானம்

நேற்று மகாசபையில் சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் தீர்மானமொன்றைத் தாக்கல் செய்தார். இஸ்ரேலின வலுத் தாக்குதலைக் கண்டித்தும், இஸ்ரேல் பிடித்த நிலைகளிலிருந்து விலகவேண்டுமென்றும் அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய அரபுக்குடியரசு, ஜோர்டான், சிரியா ஆகிய இடங்களில் இஸ்ரேல் சேதப்படுத்தியவற்றுக்குஇஸ்ரேல்நஷ்டஈடுகொடுக்கவேண்டு மென்றும் கைப்பற்றிய உடைமைகளை இஸ்ரேல் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் கொஸிஜின் சமர்ப்பித்ததீர்மானம் மேலும் கூறுகிறது.

பந்தோபஸ்து சபையின் கோரிக்கையை இஸ்ரேல் மதிக்காது, வலுத்தாக்குதலில் ஈடுபட்டிருந்ததை சோவியத் பிரதமர் கொஸிஜின் சுட்டிக்காட்டி தமது உரையில்வன்மையாகக்கண்டித்தார். பிடித்த நிலைகளிலிருந்து இஸ்ரேல் விலகவேண்டுமென்றும், இல்லாவிட்டால் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுவதற்கு அது வழிவகுக்கும்என்றும்கொஸிஜின் கூறினுர்.

அமெரிக்கா, பிரிட்டன் போக்கை சோவியத் பிரதமர் வன்மையாகக் கண்டித்தார். வியட்னும் பிரச்னை பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேல் பிரதிநிதி பேசுகையில், பிடித்த நிலைகளிலிருந்து விலகிக்கொள்வது தான் மீண்டும் ஒருயுத்தம் ஏற்படுவதற்கு வழிவகுக்குமென்ருர்.

அமெரிக்க, பிரிட்டிஸ் பிரதிநிதிகள் பேசுகையில், சோவியத்பிரதமர் தம்மீது சாட்டிய குற்றச்சாட்டுகளை மறுத்தனர். யுத்தத்தில் தாம் கலந்துகொள்ளவில்லையென்றும் தெரிவித்தனர்.

சவுதி அரேபிய பிரதிநிதி பேசுகையில், அரேபியர்களுக்கு யூதர்கள்மீது வெறுப்போ, கசப்போ கிடையாது என்றும், ஆனல் எப்பொழுதும் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாதென்றும் கூறினுர்.

மகாசபைஇன்றிரவு8மணி வரைஒத்திவைக்கப்பட்டது

## 'தி. மு. க. பட்ஜெட் ஏழைகளுக்கு ஒரு சுமை'

### காங்கிரஸ் அங்கத்தவர் கண்டனம்

சென்னை, ஜூன் 20

தமிழக அரசாங்கத்தின் 1967-68 வருடத்துக்கான பட்ஜெட் மீதான பொது விவாதம் நேற்று ராஜ்ய கீழ் சபையில் ஆரம்பமாகியது.

முதலில் பேசிய காங்கிரஸ் அங்கத்தவர் திரு. மார்டின், புதிய வரவு செலவுத்திட்டத்தினுல் ஏழைகளின் சுமை அதிகரித்துள்ளது எனக்கூறினுர். அதிகவரிகளை விதிப்பதை விடுத்து, அதிக தொழிற்சாலைகளை அமைக்க அரசாங்கம் வழிசெய்திருக்கலாமென அவர் ஆலோசனை கூறினுர்.

அடுத்துப் பேசிய தி. மு. க. அங்கத்தவர் திரு. ராம அரங்கண்ணல், நாட்டின் 5 ஆண்டுத்திட்டங்கள், எதிர்பார்த்த பலனைத்தரவில்லையென்றும், மத்திய அரசாங்கத்தின் குழப்பமான கொள்கைத்திட்டங்களே விலைவாசிகள் உயர்வுக்குக் காரணம் என்றும் கூறினுர். உணவுப்பொருளின் விலையைக்குறைத்தால் மற்றைய பொருட்களின் விலைவாசிகள் தாமாகவே குறைந்து விடுமென்பதே தி. மு. கா. வின் கொள்கையெனவும், அதனுலேயே ரூபாய்க்கு ஒருபடி அரிசி அளிக்கும் திட்டத்தை அமுலாக்கியதாகவும் திரு. அரங்கண்ணல் மேலும் குறிப்பிட்டார்.

திரு. ஹாண்டே [சுதந்திரா] பேசுகையில், ரூபாய்க்கு ஒருபடி அரிசி விநியோகிக்கும் அரசாங்கத்தின் திட்டம் விவசாயிகளைப் பாதிக்காதவகையில் கவனித்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். வரவுசெலவுத் திட்டத்தையிட்டுச் சபையில் அங்கத்தவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையில், அவசியமான மாற்றங்களை அத்திட்டத்தில் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமெனவும் அவர்வேண்டிக்கொண்டார்.

விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

### இந்திய ஆட்சி மொழி மசோதா

சென்னை, ஜூன் 20

மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழி மசோதாவை பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும் வகையில் உறுதிப்படுத்த இன்னும் சில வாரங்களாவது செல்லுமெனத் தெரிகிறது.

ராஜ்யங்களின் கருத்துக்களை அறியும்பொருட்டு, ஆட்சி மொழிநகல் மசோதா எல்லா ராஜ்ய முதன்மந்திரிகளுக்கும் அனுப்பப்பட்டது. தமிழக முதல் மந்திரியைத் தவிர, மற்ற ராஜ்ய முதல்மந்திரிகள் எவரிடமிருந்தும் இன்னும்பதில் வரவில்லை.

### ஆங்கிலம் நீடிக்க அண்ணு விருப்பம்

இந்தியாவின் துணை ஆட்சி மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கவேண்டுமென்பதே தமிழக அரசின் விருப்பமுமாகும் என்று தமிழக முதல்மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை, மத்திய உள்துறை மந்திரிக்கு எழுதிய பதிலில் குறிப்பிட்டுள்ளாரெனத் தெரிகிறது, புதுடில்லியில் பிரதமர் திருமதி இந்திராகாந்தியை அவர் சந்தித்தபோது, இக்கருத்தை அவர் பிரதமரிடம் நேரிலும் தெரிவித்தாரெனவும் அறியக்கிடக்கிறது

அடுத்தமாதம் ஆட்சி மொழி மசோதாவைப் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கும் வகையில், விரைவில் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு மத்திய அரசாங்மும்மற்ற ராஜ்யங்களின் கதன் மந்திரிகளைக் கேட்டுள்ளது.

### சீன விமானத்துக்கு அனுமதி மறுப்பு

புதுடில்லி, ஜூன் 20

சீன விமானத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது. புதுடில்லியிலுள்ள சீன தூதராலய முதல்காரியதரிசியையும், மற்றும் சிலரையும் அழைத்துச்செல்வதற்கு சீன விமானத்தை இந்தியா அனுப்பிவைப்பதற்கு இந்திய அரசாங்கத்திடம் சீனு அனுமதி கேட்டது. ஆனல் இந்திய அரசாங்கம் மறுத்துவிட்டது. பீகிங்கிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளுக்கு தகுந்த பாதுகாப்பளிக்கவேண்டுமென்றும், அவர்கள் இங்கு திரும்புவதற்கு தக்க பாதுகாப்பு வசதியளித்தபிறகே இங்கு சீன விமானம் இறங்க அனுமதியளிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

### முற்றுகை தொடர்கிறது

ஹங்கொங், ஜூன் 20

பீகிங்கிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முன்னுல் பலத்த ஆர்ப்பாட்டமும், முற்றுகையும் தொடர்ந்து நடைபெறுவதாக செய்திகள் கிடைத்துள்ளன. இந்தியாவைத் தூஷிக்கும் சுலோகங்களை தாங்கிக்கொண்டு இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.




அதிக வனப்பும்
எழிலும்
லாவண்ணியமும்
பெற
பொன்ட்ஸ்
வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ்-வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகேனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட
பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நீங்கள் வேதத்தில் [உள்ள] சில கட்டளைகளை விசுவாசித்து சில கட்டளைகளை நிராகரிக்கின்றீர்களா? உங்களில் யார் இவ்வாறு செய்கின்றார்களோ அவர்களுக்கு இவ்வுலகில் இழிவைத் தவிர [வேறொன்றும்] கிடைக்காது. மறுமையிலோ [அவர்கள்] கடுமையான வேதனையின்பால் விரட்டப்படுவார்கள்-'

— திருக்குர் ஆன்.

ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞூ ஆனி 7 மீ உ (21-6-67)

## இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல்

இலங்கை—இந்திய ஒப்பந்த [அமுல்] மசோதா செனட் சபையிலும் நிறைவேறிவிட்டது. இனி அது கவர்னர் ஜெனரலின் அங்கீகாரத்தைப் பெற்றுச் சட்டமாகிவிடும். அதாவது இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் சம்பந்தமாக இந்தியப் பிரதமர் [காலஞ்சென்ற] திரு. லால்பகதூர் சாஸ்திரியும் அப்போது இலங்கைப் பிரதமராகவிருந்த திருமதி சிறிமா பண்டாரநாயகாவும் கைச்சாத்திட்ட ஒப்பந்தம் அமுலுக்கு வந்துவிடும். இந்த ஒப்பந்தம் அமுலாவதுடன் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரின் அதாவது தீராத பிரச்னையாக இருந்து வரும் நாடற்றவர் பிரச்னைக்கு ஒரு முடிவு கிடைத்துவிடுமா?

இலங்கையில் 9,75,000 இந்திய வம்சாவழி மக்களே உள்ளனர் என்ற கணிப்பின்படி செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் கீழ் 5,25,000 பேர் இந்தியப் பிரஜாவுரிமை பெற்று இந்தியாவுக்குச் செல்லவேண்டும். மூன்று லட்சம் பேருக்கு இலங்கைப்பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும். மிகுதி ஒன்றரை லட்சம் பேர் பற்றி பின்னர் ஆலோசனை செய்யப்படும். ஒப்பந்தம் அமுல்செய்யப்படும் காலம் வரை இந்த ஒன்றரை லட்சம், ஒன்றரை லட்சமாகவேதான் இருக்குமா?

இந்தியப் பிரஜாவுரிமை பெற்று இந்தியாவுக்குத் திரும்பவேண்டிய ஐந்தேகால் லட்சம் பேரில் பெரும்பாலானோர் விரைவில் இந்தியா திரும்பிவிடுவார்களென்று ஒரு சாராரும், ஐந்தேகால் லட்சம் பேரில் ஒருவர் கூடத்தாமாகவிரும்பி இந்தியாவுக்குத் திரும்பமாட்டார்களென்று மற்றொரு சாராரும் ஜனப்பிரதிநிதிகள் சபையிலும் இம்மசோதா மீதான விவாதத்தில் பேசுகையில் தெரிவித்தனர். இதற்கு ஆதாரமாக தங்களுக்குத் தெரிந்த பல காரணங்களையும் தெரிவித்தனர்.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் அதாவது 'நாடற்றவர்' என்ற பட்டம்பெற்ற மக்களின் பிரச்னை, அந்த மக்கள் உரிமையற்று வாழவும் இதனால் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில்கூட தப்பெண்ணத்தை ஏற்படுத்தி நல்லுறவையும்நல்லெண்ணத்தை குலைக்கக் கூடிய சூழ்நிலை உருவாகக்கூடிய ஆபத்தும் தோன்றியது. இச்சமயத்தில் இருநாட்டுப் பிரதமர்களும நல்லுணர்வுடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டனர். இதே உணர்வுடன் இந்த ஒப்பந்தம் அமுல்செய்யப்படவேண்டும். இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்னை, மனிதர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை. இது மனிதாபிமானத்துடன் தீர்க்கப்படவேண்டிய விஷயம்.

ஒப்பந்தத்தின்படி இந்தியா செல்லவேண்டிய ஐந்தேகால் லட்சம் இந்திய வம்சாவழியினரில், தாமாக விரும்பிச் செல்பவர்கள் போக மிகுதிப் பேரை எப்படி அனுப்புவது என்பதுதான் இன்று சர்ச்சைக்குரிய விஷயமாக உள்ளது. ஐந்தேகால் லட்சம் பேரையும் கட்டாயமாகவாவது கப்பலில் ஏற்றி அனுப்பிவிடவேண்டும் என்பது எதிர்க்கட்சியினரின் வாதம்; "கட்டாய நாடுகடத்தல்" என்ற பேச்சுக்கே இடமிருக்கக் கூடாதென்பது மற்றையோரின் விருப்பம்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இருநாடுகளும் தகுந்த வசதிசெய்து கொடுப்பின் ஐந்தேகால் லட்சம் பேரல்ல அதற்கு மேலும் இங்கிருந்து செல்ல முன்வருவார்களென எதிர்பார்க்கலாம். இங்கிருந்து செல்பவர்களுக்கு அவர்கள் இதுவரை உழைத்துச் சேமித்ததையும் [சேமித்து வைத்திருந்தால்] அத்துடன் நஷ்டஈடாக ஒருதொகைப் பணத்தையும் கொடுத்து அவர்களை அனுப்பிவைக்க இலங்கை அரசாங்கமும், என்னநிலையில் வந்தாலும் அவர்களுக்கு ஸ்திரமான அடிப்படையில் புதிய இடத்தில் புதிய வாழ்வு தொடங்க இந்திய அரசாங்கமும்வசதியும்வாய்ப்பும் ஏற்படுத்திக்கொடுக்க முன்வந்தால் ஐந்தேகால் லட்சம் மக்களும் சென்றுவிடுவர். ஆனல் இன்றைய நிலையில் இரண்டுநாடுகளும் இந்த வசதிகளைச் செய்து கொடுக்கும் நிலையில் இல்லை. ஆனல் இந்திய வம்சாவழியினர் இங்கு இருப்பதற்கே காரணமான பிரிட்டிஷார் இன்னும் அந்த மக்களின் உழைப்பினல் பயன் பெற்றுவருகின்றனர். இந்திய வம்சாவழியினர் பிரச்னையில் பிரிட்டிஷாருக்கும் பொறுப்பும் பங்குமுண்டு. இலங்கையும் இந்தியாவும் பிரிட்டிஷாரின் பொறுப்பை உணர்த்தி, இந்த ஒப்பந்தத்தை சரிவர அமுல் செய்வதற்கு அவர்களிடமிருந்து உதவியும் ஒத்துழைப்பும் பெறவேண்டும்.

# மாக்களை மக்களாக்கிய பெருமானர்

— செல்வி தமீமா அப்துற்றஸாக் —

ஆதியில் தனி மனிதனக வாழ்ந்த ஒருவன் பின்னர் சிலர் சேர்ந்த சமூகத்திற்கு உள்ளானன். அப்பொழுது அந்தச் சிறிய சமூகத்திற்குச் சில கட்டுப்பாடுகளும் ஒழுக்கங்களும் தேவைப்பட்டன. எனவே எல்லாம் வல்ல இறைவன் தீர்க்கதரிசிகளை அதாவது நபிமார்களை உலகில் தோற்றுவித்தான், அன்றியும் அச் சமூகங்களுக்கு சுஹுபுகள் எனும் வேதகட்டளைகளைக் கொடுத்து சமூகத்தில் சீர் திருத்தங்களை உண்டாக்கினன். இவ்வாறுக் காலக்கிரமத்தில் சமூகம் பல்கிப் பெருகி பல திறப்பட்ட வகுப்பினர்களாயினர்.

ஈஸா நபி அலைஹிவஸல்லாம் அவர்கள் இஞ்ஜீல் வேதத்தை இறைவனிடம் பெற்றுச் சமூகத்தைச் சீர் திருத்த அரும்பாடுபட்டார்கள். "உன்னை ஒருவன் தூற்றினல் நீ அவனைப் போற்று" என்று கூறினர்கள். சொல்லில் மட்டுமா? இல்லை, சொன்னதைப் போன்றே செயலிலும் காட்டினர்கள். ஆனல் சமூகம் சீர் திருந்தியதா? இல்லவே இல்லை. ஒரு சிலரால் மட்டும் ஒழுக்கம் உயிரிலும் மேலாகக் கருதப்பட்டது எனவே அவர்கள் மட்டும் உண்மையை உயர் லட்சியமாகக் கொண்டு வந்தார்கள். ஈஸா [அலை] அவர்களுக்குப் பின் 570 ஆண்டுகள் வரை நபிமார்கள் இவ்வுலகிற்கு தோற்றம் அளிக்கவில்லை. அதன் காரணமாகவே தான் சமூகத்திற் பல குழப்பங்கள் உண்டாயின. சீர்கேடுகள் மலிந்தன. மக்கள் மாக்களாக மாறினர்கள். பெண்கள் மிருகங்களை விடமோசமாக நடத்தப்பட்டனர். ஆடு, மாடுகளைப் போல் அடிமையாக்கப்பட்டனர். சந்தையிலே விலை கூறப்பட்டனர். சுருங்கக் கூறினல் அராபியாவை மையமாகக் கொண்டு அதன் நாலாபக்கங்களிலும் பஞ்சமா பாதகங்களே தலை விரித்துத் தாண்டவமாடின. எங்கு நோக்கினும் கொள்ளைக் கூட்டமும், வழிப்பறிக் கள்வரும் சொல்லொணு இன்னல் விளைவித்தனர். இன்னொரு பகுதியினர் மாக்களைப் போல் வீதியில் அலைந்தனர். வலியவன் மெலியவனைத் தன் வாள்கொண்டு தாக்கினன். பெண்களின் மானம் பகிரங்கமாகப் பறிக்கப்பட்டது. இந்நிலையிலேதான் அண்ணல்நபி [ஸல்] அவர்கள் இந்தச் சமூகத்தின் சீர்கேடுகளை எவ்வாறு தடுக்கலாம் என்று சிந்தனையில் ஆழ்ந்தார்கள். மக்காவில் உள்ள ஹிறு மலைக்குகையில் தனித்திருந்து விழித்திருந்து ஆண்டவனின் நுஸ்] றத்தை] அதாவது உதவியை வேண்டினர்க்ள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் "ஏ! இறைவா! இந்தச் சமூகத்தின சீர்கேடான செயல்களை அகற்றுவதற்கு நல்ல ஒரு சன்மார்க்கத்தை அருள்வாயாக" என்று கண்ணீர் சொரிந்து பிரார்த்தனை செய்தார்கள். அதன் பயனக சாந்தியும் சமாதானமும் அடங்கிய இஸ்லாம் குர்ஆனின் மூலம் பெருமானர் [ஸல்] அவர்களுக்கு அருளப்பட்டது. ஏன்? அவர்களின் உம்மத்தவர்களான எங்களுக்கும் கிட்டியது. எப்படி வறுமைப்பிணியில் வாடியவர்களுக்கு அரும் பெரும் பொக்கிஷமாக— தீராப்பிணிதீர்க்கும் அரும் பெரும் மருந்தாக — அஞ்ஞான இருள்நீக்கும் மெஞ்ஞான ஒளிப்பிளம்பாக— அட்டகாசம் புரிந்தவனை அஹிம்சா மூர்த்தியாக பிறவிக் கடலின் பிணக்கறுக்கத் தெரியாது அலைந்தோருக்கு அறவழியாம் அரும்பெரும் தோணியாக உலகோர்க்குக் கிடைத்தது. ஆனல்! முஸ்லிம்களாகிய நாம் குர்ஆன் யாருக்கோ வந்த ஒரு சாதாரண புத்தகம்என மூடி மூலையிலே போட்டுவிட்டோம். அதன் காரணமாக நாம் தாழ்ந்த நிலைக்கு இன்று சென்றுகொண்டிருக்கிறேம். இது பெருங்கைசேதம். நாங்கள் தூங்கிக் கிடந்ததுபோதும். எம்மை ஏனைய சமூகத்தவர்கள் பாராட்டவேண்டும். ஆகவே இஸ்லாமிய வீர சஹாபாக்களின் இரத்தம் நம்மீது ஓடட்டும். அவர்கள் செய்த சேவை எங்களிடம் பரவட்டும். அதன்மூலம் நல்லதொரு பரஸ்பரமும் சிறந்த வாழ்வும் மலரட்டும்.

---

## புங்குடுதீவு மக்கள் சேவா சங்கப்பணி

புங்குடுதீவு, செவ்.

நயினதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்குச் செல்லும் யாத்திரீகர்களின் சௌகரியத்தை முன்னிட்டு இறுப்பிட்டியில் உள்ள கழுதைப்பிட்டித் துறைமுகத்தில் மக்கள் சேவாசங்கத்தினர் பந்தல் அமைத்துகுடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். இரதோற்சவத்தின் போது அடியார்களுக்கு அன்னதானமும்வழங்கப்படவிருக்கிறது.

### மீலாத் செய்தி

## ஒன்றுபடுவோம்!

இன்று நாம் உலகைச் சுற்றிப் பார்வையைச் செலுத்தும்போது, முஸ்லிம்களுக்குப் பலவகைகளிலும் தோல்வி ஏற்பட்டு வருவதை அவதானிக்கலாம். ஈழத்து வாழும் நாமும் இதனல் பெரிதும் விசனப்படுகிறேம். அல்லாவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்காததே இதற்கு முக்கிய காரணம் என்பதை இன்று உலகம் ஒத்துக்கொண்டுவிட்டது. சகோதரத்துவக் கோட்பாட்டினையும், அன்பையும், அறத்தினையும் வளர்க்கவேண்டிய பொறுப்பான கடமை முஸ்லிம் உலகைச் சார்ந்திருக்க, முஸ்லிம் நாடுகள் ஒன்ருேடொன்று மோதிக்கொண்டு காலத்தைக் கழிக்கிறேம். நாம் இந்த நிர்க்கதிக்குள்ளானதற்கும் இதுதான் காரணம்.

பெருமானர் பிறந்த இந்தப் புண்ணிய தினத்தில் ஒரு சபதமெடுப்போம். முஸ்லிம்கள் ஒன்று சேரவேண்டும்; அரபுநாடுகள் ஒன்றுசேர்ந்து புது உலகைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்ப்போம்.

எம். எச். முஹம்மத்,
தொழில் மந்திரி.

## நாட்டிலும் நகரிலும்

நேற்று மாலை யாழ்ப்பாணம் பெரியகடைப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தேன். பழைய பஸ் காலைக்கருகில் ஆஸ்பத்திரி வீதி வழியாக இரண்டுவாலிபர்கள் ஒரு சைக்கிளில் 'டபிள்' போனர்கள். திடீரென்று எங்கிருந்தோ ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் மோட்டார் சைக்கிளில் வந்தார். வாலிபர்களைத்தடுத்து நிறுத்தி குத்துச் சண்டை 'குளோவ்ஸ்' போட்ட தமது கைகளால் 'மடார், மடார்' என்று இரு வாலிபர்களுக்கும் நாலைந்து கன்னத்தில் கொடுத்தார்இன்ஸ்பெக்டர். அவரோடு வந்த இன்னொரு பொலிஸ்காரர் சைக்கிள் சக்கரங்களின் காற்றை திறந்துவிட்டார். பின்பு இருவரும் மோட்டார் சைக்கிளில் ஏறிப் போய்விட்டார்கள்.

சைக்கிளில் 'டபிள்' போகிறவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒருவகையினர் வேறு வழியின்றி அவசியத்தின் நிமித்தம் அப்படிச் செய்பவர்கள். சைக்கிள் ஏழை மக்களின் வாகனம். ஒரே தொழிலுக்குப் போகிறவர்கள் இரண்டு பேராகச் சேர்ந்து சைக்கிளில் போவார்கள். ஒரு தந்தை பிள்ளைகளை தமது சைக்கிளில் வைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு செல்லக்கூடும். இரண்டு சகோதரர்கள் ஒரே சைக்கிளில் கல்லூரிக்குப் போகலாம். நடக்க முடியாத ஒருவரை இன்னொருவர் சைக்கிளில் ஏற்றிச் செல்லக்கூடும். இப்படி போக்குவரத்து செலவுகளை குறைப்பதற்காக அவசியத்தின் காரணமாக 'டபிள்' போகிறவர்கள் வேண்டுமென்றே சட்டத்தை மீறுபவர்களல்ல.

மற்றஇனம் இருக்கிறதே, இதுதான் ஆபத்தானது, தண்டனைக்குரியது. பெரும்பாலும் பள்ளிக்கூட மாணவர்களும், வாலிபத் திமிர் பிடித்து வீராப்பு பேசித் திரியும் சினிமா லோலர்களும் இவ்வகையைச் சேர்ந்தவர்கள். இவர்களைக் கண்டவுடன் கார் சாரதிகளும் பஸ் சாரதிகளும் குலைநடுங்குவார்கள். பாதசாரிகளுக்கு இவர்கள் சிம்ம சொப்பனம். இளம்பெண்கள் வீரிட்டுக் கொண்டு ஒதுங்குவார்கள். நாலைந்து சைக்கிள்களில் நிரையாக ஓடுவது, இரண்டு கைகளையும் கைப்பிடியிலிருந்து எடுத்துவிட்டு ஓடுவது. இப்படிப் பல ஜாலவித்தைகளை அவர்கள் காட்டுவார்கள். இவர்களால் தெருவில் போகும் எல்லாவற்றிற்கும் ஆபத்து, அவர்களுக்கும் ஆபத்து. அவசியம் எதுவுமில்லாமல் சட்டத்தைஉதாசீனம் செய்து 'டபிள்' போகிறவர்கள் இவர்கள்.

எந்த வகையினராயிருந்தாலும் சரி, 'டபிள்' போவது சட்டவிரோதமான காரியம் என்றிருக்கும்வரை தண்டனைக்குள்ளாக வேண்டியவர்களே. ஆயினும் மேலே வர்ணித்தபடி தண்டனை வழங்குவது முறையா? அதற்குச் சட்டம் இடம் கொடுக்கிறதா? பொலிஸ்காரர் ஒருவர் தாம் பொலிஸ்காரர் என்பதற்காக தாமே தண்டனை வழங்கலாமா?

இது ஒரு மகாசிக்கலான பிரச்னை. சைக்கிள்காரர் செய்யும் சர்க்கஸ் வித்தைகளைப் பார்த்தால் அவர்களுக்கு நல்ல பூஜைகொடுப்பதோடு விட்டுவிடாமல் சைக்கிளையே பறிமுதல் செய்தாலென்ன என்று தோன்றுகிறது. சைக்கிளில் இரட்டை போகிறவர்கள். வெளிச்சம், பிறேக் இல்லா

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணல் முகம்மது நபி (ஸல்) காட்டியவழி அகிலத்தின் பிரச்னைகளைத் தீர்க்கும்

மீலாத் செய்தி

## 'திருநாள் இது!'

—டாக்டர் கலீல்

நபிகளாரின் போதனைகளும், அல்லாவின் ஆணைகளும், இறை இன்பத்தூதர் அவதார நினைவுதினம் இந்தப் பேருண்மைகளை உணர்ந்து கொள்ளும் திருநாள்தான் இது!' என்று அகிலஇலங்கை முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் எம். ஸீ. எம். கலீல் விடுத்துள்ள மீலாத்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்,

தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

மக்காவாசிகள் மதினாவில் புகுந்து இஸ்லாத்தை அழித்தொழிக்க மேற்கொண்ட ஒவ்வொரு தடவையும் அவர்கள் தோற்கடிக் கப்பட்டார்கள். தொடர்ந்து வந்த யுத்த வெறி தாங்காது மக்காவிற்குச் சென்று எதிரிகளின் சேஷ்டைகளை வேரோடு களைந்தெறிந்து அங்கே வெற்றிக்கொடி நாட்டினுர்கள் முஹம்மது நபி [ஸல்] அவர்கள். தம் உயிருக்கே உலைவைக்க எத்தனித்த பல ஆயிரக்கணக்கான எதிரிகளுக்கு விடுதலை அளித்தார்கள். இவை இஸ்லாமின் உண்மை நிலையாகும்.

எங்கள் அருமை நாயகம் எம்மறைக்குந் தாயகம் றசூலே கரீம் முஹம்மது முஸ்தபா [ஸல்] அவர்களின் ஜனன தினத்திலே அப்பெருந்தகையின் அன்பு நெறியையும், அளப்பரிய இம்மை மறுமைக்குரிய சேவையையும் நினைவுகூர்வதும், அதன் வழி நடப்பதற்கு உறுதி கொள்வதும் மிகமிகப் பொருத்தமாகுமெனக் கருதலானேன். அவ்வெண்ணத்தின் தோற்றமே இக்கட்டுரையாகமலர்ந்ததெனலாம். அன்பர்களே, உலகம் போற்றும் உத்தமர் மஹாத்மா காந்தியடிகள், 'முஹம்மது நபி [ஸல்] அவர்களின் உண்மையான வாழ்க்கை முறையைப் பன்முறை அவதானத்தோடும் நன்மதிப்போடும் படித்தேன்; உலகமக்களை அறவழியில் அணைத்துச் செல்வதற்காக அவ்வுத்தமர் முனைந்தபோது, அனுபவித்த ஆருத்துயரங்களையும் துன்பங்களையும் நான் படித்தபோதெல்லாம் கண்ணீர் உகுத்தேன் என்று கூறினுர்கள். மேல்நாட்டு நல்லறிஞரான ஜோர்ஜ் பேனுட்ஷா, மக்காவில் உதித்த மகான் முஹம்மது நபி [ஸல்] அவர்கள் உலகுக்கு அன்று போதித்துச் செய்கையிலும் வெற்றிகண்ட சகோதரத்துவம், சமத்துவம், சனநாயகம் ஆதிய சீலக்கொள்கைகளை இன்று இந்த வல்லரசுகள் பின்பற்றினுல்என்ன என வினவியுள்ளார்.

மற்றெரு பிரான்சிய தத்துவ ஞானியான கவிஞர் லாமார்ட், மக்கள் மக்களாகவே வாழுதற்கு வழிகாட்டிய மஹான் முஹம்மது நபி [ஸல்] அவர்களது அட்டசீலக் கொள்கைகளைப் பின்பற்றினுல் இன்று தீர்க்கமுடியாது திண்டாடும் வல்லரசுகளினதும் பொதுவாக உலகினதும் பிரச்னைகள் யாவும் மிகமிக இலகுவில் தீர்ந்து உலகிலே சமாதானம் நிலவும் என்று லாவண்யமாகக் கூறினுர். மனிதர்களின்மகத்துவத்தை அளக்கக்கூடிய எந்தஅளவு கோலினுல் அளந்துபார்ப்பினும் எந்தமனிதன் நபிகள்நாயகத்தை விட மேலானவன்? ஒருவனுமில்லை என்று லாமார்ட் கூறுகிறுர்.

இம்மை மறுமைக் கொள்கைகளைப் பின்பற்றுவார்கள்'' எனக் கண்ணீர் சொரிந்து பிரார்த்தனை செய்தார்கள். இப்பொறுக்கும் பொறையே, அண்ணல் நபியை அகிலம் போற்றி வருவதற்குக் காரணமாயமைந்த மூலகாரணமென்க.

அடுத்து அவர்கள் செய்த சகோதரத்துவம் உலகோரை இன்றும் ஆச்சரியத்தில் ஆழ்த்திக் கொண்டே இருக்கின்றதென்றல் அதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ மாட்டார்கள். கறுப்பன் வெள்ளையன், தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்னும் நிறகுண பேதங்களைச் சாவதானமாகவும், சாதுரியமாக

— எம். எச். எம். அப்துற் றஸ்ஸாக் —

[தலைமை ஆசிரியர், யாழ். வண். முஸ்லிம் வித்தியாலயம்]

இவ்வாறே நாம்பல்வகைக் கோணங்களை ஆராயும்போதெல்லாம் ஒவ்வொரு பேரறிஞரும் எம்பெருமானுரின் பெருங்குணங்களைப்பெரிதும் வியந்து பாராட்டியிருப்பதுடன் தத்தம் நாடுகளிலும் சமூகங்களிலும் பின்பற்றச் செய்துள்ளனர் என்பதை நாம் அறியமுடிகின்றது. எனவே இத்தனை சிறப்புக்களுக்கும் காரியமாகவும் காரணமாகவும் எம்பெருமானுரிடத்தில் என்னதான் இருந்தது என்ற ஐயப்பாடு தோன்றுவதியல்பே ஆம். இருந்தது. இதோ! அவதானியுங்கள்:

உலகம் மனிதகுல மாணிக்கங்கள் பலரைக் காலத்துக்குக்காலம் வெளியாக்க எல்லாம் வல்ல இறைவன் நாடினுன். அங்ஙனே வெளியானவர்களில் இறுதியானவர்கள் உலகத்தோர்களுக்கோர் உன்ன உத்தமோத்தமராய் கருணை வள்ளலாய் வந்துதித்த எம்பெருமானுர் [ஸல்] அவர்களாவார்கள்.

முஹம்மது நபி [ஸல்] அவர்களுக்கும் ஏனைய தீர்க்கதரிசிகளுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் யாதெனில் ஏனைய நபிமார்களும் தீர்க்கதரிசிகளும் தம்மைப்பின்பற்ருத மக்களையும் தமக்குத் துன்பஞ் செய்த மக்களையும் சபிக்கும்படியும் அழித்து விடும்படியும் இறைவனிடம் வேண்டினுர்கள். அவர்கள் வேண்டுதலை இறைவன் பூர்த்திசெய்தான்.

அதனுலே சிலசமூகத்தவர்கள் ஜலத்தாலும் கொடிய சூருவழிக் காற்ருலும் அழிந்தொழிந்தார்கள். ஆனுல், எமதருமை நாயகம் [ஸல்] அவர்களோவெனில் பல இடையூறுகள், இன்னல்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலும், கல்லாலடித்துக் கால்களிலே குருதி வழிந்தோடிய பொழுதிலும் ஒரு சிறிதும் மனம் வருந்தவேயில்லை. வருந்துதற்குப் பதிலாக, இரு கைகளையும் ஏந்தி ''ஏ! என்னிறைவா! இவர்கள் எனக்கிழைத்தஇன்னல்களுக்காக இவர்களைச் சபித்து விடாதே; இவர்களை மன்னித்துவிடுவாயாக. இவர்களது சந்ததிகளாவது எனது

வும் நீக்கி யாவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற தீர்க்கமான கொள்கையை நிலைநாட்டி வெற்றியீட்டினுர்கள். இவ்வாறே சமத்துவத்தையும் நிலைபெறச் செய்தார்கள்.

பெரியார்களே, இன்று நமது நிலையைச் சிறிது சிந்தனைசெய்து பாருங்கள்! எமது மத்தியிலே குலப்பெருமை, குடிப்பெருமை முதலியவைகளை எமது இலட்சியமாகக் கொண்டு வாழ்கின்ருேமே? ஏழைகளைத் தள்ளிவைத்து எள்ளி நகையாடுகின்ருேமே? அப்படியாயின் நாம் அண்ணல் நபியின் அறவழியை எவ்வாறு பின்பற்றியவர்களாக முடியும்?

எல்லாவகையாலும் எம்பெருமான் முஹம்மது நபி [ஸல்] அவர்களை முற்றிலும் பின்பற்றிச் சிந்தை, செயலாதிய அம்சங்களிலே திளைத்து அதன்மூலம் எல்லாம் வல்ல இறையருளைப் பெற்றுய்வோமாக; ஆமீன்.

மீலாத் செய்தி

## சாந்தி சமாதானம்

சாந்தி சமாதானம் இவ்விருதாரக மந்திரங்களையும், அவனி அமைதிபெற நினைப்போமாக! முதன் முதலில் செயல் வழி நடப்போம்; பின்னர் அதனை சொல்லால் உணர்த்துவோம். சொல் முதலல்ல, செயலே முதல்.

நம் மனதிற்கு நாம் அடிமையல்ல, நம் மனமே நமக்கு அடிமை!

—சர். ராஸிக் பரீத் எம். பி.

## மீலாத் விழா விருந்து மஜ்லிஸ்

யாழ்ப்பாணம். புதன் மன்பஉல்உலூம் மதுறஷ்யவின் 35-ம் வருட மீலாத் விழா[விருந்துமஜ்லிஸ்(சபை) வழமைபோல் இன்று புதன் கிழமை நண்பகல் அண்ணல் நபிமுஹம்மது (ஸல்) அவர்கள் பெயரில் திருக்குர்ஆன் ஓதி தமாம் [முடிவு] செய்த பின்னர் விருந்து நடைபெறும்.


KLAWATHIE CAFE Phone: 247

மன்னுரில் சிறந்த சைவ கோட்டல்

''கலாவதி கபே''

சுத்தமான சைவ போசனம், மற்றும் சிற்றுண்டி வகைகளும் சிறந்த முறையில் குறித்தநேரத்தில் கிடைக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

கலாவதி கபே

பிரதான வீதி, — மன்னுர்.



C. W. E. கூட்டுறவு மொத்த ஸ்தாபனம்

அங்கீகரிக்கப்பட்ட புடவை வியாபாரிகள்



★ சிங்கர் ஷேர்ட்

★ பங்களூர், மைசூர் பட்டுப் புடவைகளும்

★ நைலோன் ஷேர்ட் வகைகளும்

விற்பனை செய்யப்படுகின்றன.

நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

லக்கிஸ்டோர்ஸ்

பெரியகடை, மன்னுர்.



அனைவருக்கும் எமது மீலாத் வாழ்த்துக்கள்

யாழ்ப்பாண மக்களை கவர்ந்த

கண்ணுடி வியாபாரிகள்

ஜெஸிமா பிக்சர் பலேஸ்

222, 232 கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்

போன்: 7127



புனித நபி பிறந்த இப்புனித தினத்தன்று

எங்கள்

அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எங்கள்

மீலாத் நல்வாழ்த்துக்கள்

ஏ. கே. எஸ். & சன்ஸ்

நகை வியாபாரிகள்

யாழ்ப்பாணம். போன்: 519



எவர்சில்வர், சாய்ப்புச்சாமான்கள், கண்ணுடி வகைகளுக்கு பெயர்பெற்ற ஒரேயொரு ஸ்தாபனம்

எஸ். ஏ. எஸ். ஹமீட் அன் பிறதர்ஸ்

95, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

''ரெலிபோன்: 489''

அன்பளிப்புக்குரிய சகல சாமான்களும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். கைத்தறி சாறிவகைகள் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

'Transport agent'

யாழ்ப்பாணம் — கொழும்பு கொழும்பு — யாழ்ப்பாணம்

பொதிகளை ஏற்றுவதற்கு எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

எஸ். ஏ. எஸ். ஹமீட் அன் பிறதர்ஸ்

''ரெலிபோன் 5412'' 3, புதிய சோனக தெரு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணல் முகம்மது நபி (ஸல்) காட்டியவழி அகிலத்தின் பிரச்னைகளைத் தீர்க்கும்

மீலாத் செய்தி

## ‘திருநாள் இது!’

—டாக்டர் கலீல்

நபிகளாரின் போதனைகளும், அல்லாவின் ஆணைகளும், இறை இன்பத்தூதர் அவதார நினைவுதினம் இந்தப் பேருண்மைகளை உணர்ந்து கொள்ளும் திருநாள்தான் இது!’ என்று அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் எம். ஸீ. எம். கலீல் விடுத்துள்ள மீலாத்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

மக்கா வாசிகள் மதினாவில் புகுந்து இஸ்லாத்தை அழித்தொழிக்க மேற்கொண்ட ஒவ்வொரு தடவையும் அவர்கள் தோற்கடிக் கப்பட்டார்கள். தொடர்ந்து வந்த யுத்த வெறி தாங்காது மக்காவிற்குச் சென்று எதிரிகளின் சேஷ்டைகளை வேரோடு களைந்தெறிந்து அங்கே வெற்றிகொடி நாட்டினார்கள் முஹம்மது நபி [ஸல்] அவர்கள். தம் உயிருக்கே உலைவைக்க எத்தனித்த பல ஆயிரக் கணக்கான எதிரிகளுக்கு விருந்தளித்தார்கள். இவே இஸ்லாமின் உண்மை நிலையாகும்.

எங்கள் அருமை நாயகம் எம்மறைக்குந் தாயகம் றசூலே கரீம் முஹம்மது முஸ்தபா [ஸல்] அவர்களின் ஜனன தினத்திலே அப்பெருந்தகையின் அன்பு நெறியையும், அளப்பரிய இம்மை மறுமைக்குரிய சேவையையும் நினைவுகூர்வதும், அதன் வழி நடப்பதற்கு உறுதி கொள்வதும் மிக மிகப் பொருத்தமாகுமெனக் கருதலானேன். அவ்வெண்ணத்தின் தோற்றமே இக்கட்டுரையாகமலர்ந்ததெனலாம். அன்பர்களே, உலகம் போற்றும் உத்தமர் மஹாத்மா காந்தியடிகள், ‘முஹம்மது நபி [ஸல்] அவர்களின் உண்மையான வாழ்க்கை முறையைப் பன்முறை அவதானத்தோடும் நன்மதிப்போடும் படித்தேன்; உலகமக்களை அறவழியில் அணைத்துச் செல்வதற்காக அவ்வுத்தமர் முனைந்தபோது, அனுபவித்த ஆருத்துயரங்களையும் துன்பங்களையும் நான் படித்தபோதெல்லாம் கண்ணீர் உகுத்தேன் என்று கூறினார்கள். மேல்நாட்டு நல்லறிஞரான ஜோர்ஜ் பேணட்ஷா, மக்காவில் உதித்த மகான் முஹம்மது நபி [ஸல்] அவர்கள் உலகுக்கு அன்று போதித்துச் செய்கையிலும் வெற்றிகண்ட சகோதரத்துவம், சமத்துவம், சனநாயகம் ஆதிய சீலக்கொள்கைகளை இன்று இந்த வல்லரசுகள் பின்பற்றினலென்ன என வினவியுள்ளார்.

மற்றொரு பிரான்சிய தத்துவ ஞானியான கவிஞர் லாமார்ட், மக்கள் மக்களாகவே வாழுதற்கு வழிகாட்டிய மஹான் முஹம்மது நபி [ஸல்] அவர்களது அட்ட சீலக் கொள்கைகளைப் பின்பற்றினல் இன்று தீர்க்கமுடியாது திண்டாடும் வல்லரசுகளினதும் பொதுவாக உலகினதும் பிரச்னைகள் யாவும் மிகமிக இலகுவில் தீர்ந்து உலகிலே சமாதானம் நிலவும் என்று லாவண்யமாகக் கூறினர். மனிதர்களின்மகத்துவத்தை அளக்கக்கூடிய எந்தஅளவு கோலினல் அளந்துபார்ப்பினும் எந்தமனிதன் நபிகள்நாயகத்தை விட மேலானவன்? ஒருவனுமில்லை என்று லாமார்ட் கூறுகிறார்.

இவ்வாறே நாம்பல்வகைக் கோணங்களை ஆராயும்போதெல்லாம் ஒவ்வொரு பேரறிஞரும் எம்பெருமானரின் பெருங்குணங்களைப்பெரிதும் வியந்து பாராட்டியிருப்பதுடன் தத்தம் நாடுகளிலும் சமூகங்களிலும் பின்பற்றச் செய்துள்ளனர் என்பதை நாம் அறியமுடிகின்றது. எனவே இத்தனை சிறப்புக்களுக்கும் காரியமாகவும் காரணமாகவும் எம்பெருமானரிடத்தில் என்னதான் இருந்தது என்ற ஐயப்பாடு தோன்றுவதியல்பே ஆம். இருந்தது. இதோ! அவதானியுங்கள்:

உலகம் மனிதகுல மாணிக்கங்கள் பலரைக் காலத்துக்குக்காலம் வெளியாக்க எல்லாம் வல்ல இறைவன் நாடினன். அங்ஙனே வெளியானவர்களில் இறுதியானவர்கள் உலகத்தோர்களுக்கோர் உன்ன உத்தமோத்தமராய் கருணை வள்ளலாய் வந்துதித்த எம்பெருமானர் [ஸல்] அவர்களாவார்கள்.

முஹம்மது நபி [ஸல்] அவர்களுக்கும் ஏனைய தீர்க்கதரிசிகளுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் யாதெனில் ஏனைய நபிமார்களும் தீர்க்கதரிசிகளும் தம்மைப்பின்பற்ருத மக்களையும் தமக்குத் துன்பஞ் செய்த மக்களையும் சபிக்கும்படியும் அழித்து விடும்படியும் இறைவனிடம் வேண்டினர்கள். அவர்கள் வேண்டுதலை இறைவன் பூர்த்திசெய்தான்.

அதனுலே சிலசமூகத்தவர்கள் ஜலத்தாலும் கொடிய சூருவழிக் காற்ருலும் அழிந்தொழிந்தார்கள். ஆனல், எமதருமை நாயகம் [ஸல்] அவர்களோவெனில் பல இடையூறுகள், இன்னல்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலும், கல்லாலடித்துக் கால்களிலே குருதி வழிந்தோடிய பொழுதிலும் ஒரு சிறிதும் மனம் வருந்தவேயில்லை. வருந்துதற்குப் பதிலாக, இரு கைகளையும் ஏந்தி ‘‘ஏ! என்னிறைவா! இவர்கள் எனக்கிழைத்தஇன்னல்களுக்காக இவர்களைச் சபித்துவிடாதே; இவர்களை மன்னித்துவிடுவாயாக. இவர்களது சந்ததிகளாவது எனது இம்மை மறுமைக் கொள்கைகளைப் பின்பற்றுவார்கள்’’ எனக் கண்ணீ சொரிந்து பிரார்த்தனை செய்தார்கள். இப்பொறுக்கும் பொறையே, அண்ணல் நபியை அகிலம் போற்றி வருவதற்குக் காரணமாயமைந்த மூலகாரணமென்க.

அடுத்து அவர்கள் செய்த சகோதரத்துவம் உலகோரை இன்றும் ஆச்சரியத்தில் ஆழ்த்திக் கொண்டே இருக்கின்றதென்ருல் அதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ மாட்டார்கள். கறுப்பன் வெள்ளையன், தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்னும் நிறகுண பேதங்களைச் சாவதானமாகவும், சாதுரியமாகவும் நீக்கி யாவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற தீர்க்கமான கொள்கையை நிலை நாட்டி வெற்றியீட்டினர்கள். இவ்வாறே சமத்துவத்தையும் நிலைபெறச் செய்தார்கள்.

பெரியார்களே, இன்று நமது நிலையைச் சிறிது சிந்தனைசெய்து பாருங்கள்! எமது மத்தியிலே குலப்பெருமை, குடிப்பெருமை முதலியவைகளை எமது இலட்சியமாகக் கொண்டு வாழ்கின்ருேமே? ஏழைகளைத் தள்ளிவைத்து எள்ளி நகையாடுகின்ருேமே? அப்படியாயின் நாம் அண்ணல் நபியின் அறவழியை எவ்வாறு பின்பற்றியவர்களாக முடியும்?

எல்லாவகையாலும் எம்பெருமான் முஹம்மது நபி [ஸல்] அவர்களை முற்றிலும் பின்பற்றிச் சிந்தை, செயலாதிய அம்சங்களிலே திளைத்து அதன்மூலம் எல்லாம் வல்ல இறையருளைப் பெற்றுய்வோமாக; ஆமீன்.

— எம். எச். எம். அப்துற் றஸ்ஸாக் —
[தலைமை ஆசிரியர், யாழ். வண். முஸ்லிம் வித்தியாலயம்]

மீலாத் செய்தி

## சாந்தி சமாதானம்

சாந்தி சமாதானம் இவ்விருதாரக மந்திரங்களையும், அவனி அமைதி பெற நினைப்போமாக! முதன் முதலில் செயல் வழி நடப்போம்; பின்னர் அதனை சொல்லால் உணர்த்துவோம். சொல் முதலல்ல, செயலே முதல்.

நம் மனதிற்கு நாம் அடிமையல்ல, நம் மனமே நமக்கு அடிமை!

—சர். ராஸிக் பரீத்
எம். பி.

## மீலாத் விழா விருந்து மஜ்லிஸ்

யாழ்ப்பாணம். புதன் மன்பஉல் உலூம் மதுறஸவின் 35-ம் வருட மீலாத் விழா விருந்துமஜ்லிஸ்(சபை) வழமைபோல் இன்று புதன்கிழமை நண்பகல் அண்ணல் நபிமுஹம்மது (ஸல்) அவர்கள் பெயரில் திருக்குர்ஆன் ஓதி தமாம் [முடிவு] செய்த பின்னர் விருந்து நடைபெறும்.

KALAWATHIE CAFE Phone: 247
மன்னரில் சிறந்த சைவ கோட்டல்
‘‘கலாவதி கபே’’
சுத்தமான சைவ போசனம், மற்றும் சிற்றுண்டி வகைகளும் சிறந்த முறையில் குறித்தநேரத்தில் கிடைக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்
கலாவதி கபே
பிரதான வீதி, — மன்னர்.

C. W. E. கூட்டுறவு மொத்த ஸ்தாபனம்
அங்கீகரிக்கப்பட்ட புடவை வியாபாரிகள்

★ சிங்கர் ஷேர்ட்
★ பங்களூர், மைசூர் பட்டுப் புடவைகளும்
★ நைலோன் ஷேர்ட் வகைகளும்
விற்பனை செய்யப்படுகின்றன.
நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
லக்கி ஸ்டோர்ஸ்
பெரியகடை, மன்னர்.

அனைவருக்கும் எமது மீலாத் வாழ்த்துக்கள்
யாழ்ப்பாண மக்களை கவர்ந்த
கண்ணுடி வியாபாரிகள்
ஜெஸிமா பிக்சர் பலேஸ்
222, 232 கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
போன்: 7127

புனித நபி பிறந்த இப்புனித தினத்தன்று
எங்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எங்கள் மீலாத் நல்வாழ்த்துக்கள்
ஏ. கே. எஸ். & சன்ஸ்
நகை வியாபாரிகள்
யாழ்ப்பாணம். போன்: 519

எவர்சில்வர், சாய்ப்புச்சாமான்கள், கண்ணுடி வகைகளுக்கு பெயர்பெற்ற
ஒரேயொரு ஸ்தாபனம்
எஸ். ஏ. எஸ். ஹமீட் அன் பிறதர்ஸ்
95, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
‘‘ரெலிபோன்: 489’’
அன்பளிப்புக்குரிய சகல சாமான்களும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். கைத்தறி சாறிவகைகள் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
‘Transport agent’
யாழ்ப்பாணம் — கொழும்பு கொழும்பு — யாழ்ப்பாணம்
[illegible]களுக்கு எங்களுடன் தொடர்புகொள்ளவும்.
எஸ். ஏ. எஸ். ஹமீட் அன் பிறதர்ஸ்
‘‘ரெலிபோன் 5412’’ 3, புதிய சோனக தெரு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெற்றிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்வாய் கிழக்கு மாகாண சிகை அலங்கரிப்பாளர் சங்கச் செயலாளரும் கவிஞருமான திரு. ஏ. அந்தோனிமுத்து [முத்தழகு] மட்டக்களப்பு மாநகரசபைக்குப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதைப் பாராட்டி வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது அவரது வெற்றி உழைக்கும் மக்களின் வெற்றி என்றும், உரிமை பறிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக அவர் அயராது பாடுபடவேண்டுமென்றும் சங்கத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அவருக்குத் தந்திமூலம் தெரிவிக்கப்பட்டன.

வெற்றிபெற்ற கவிஞர் 'முத்தழகு'வை விரைவில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து அவருக்கு சங்கச் சார்பில் ஒரு பொது வரவேற்பு அளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்துக்கு திரு. கே. இராசையா தலைமைவகித்தார்.

## மண்வெட்டி வழங்கு முடிவு

உடுவில், செவ்வாய் உடுவில் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள உணவுற் பத்திச்சபையின் கூட்டம் திரு.மு. இராமலிங்கம் தலைமையில் சங்குவேலியில் நடைபெற்றது.

1967-68காலபோகம், சிறுபோகத்திட்டங்கள்வகுக்கப்பட்டு விவசாயிகளுக்கு மண்வெட்டி விதை வெண்காயம் போன்றவை பலநோக்குச் கூட்டுறவுச்சங்கமூலம் விநியோகிக்கவேண்டும் என்றும் கோலன்காமம் ரோட்டை சிரமதானமூலம் புனரமைப்புச்செய்வதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன

கல்லுண்டாய்

## உப்பள அதிபருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், புதன் கல்லுண்டாய் உப்பளத்தில் இம்முறை சிறுபோக விளைவு விளைவிக்கப்பட்டது. இச்சிறுபோக விளைவு வடபகுதியிலேயே கல்லுண்டாய் உப்பளத்தில்தான் முதன்முதல் விளைவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முக்கிய கர்த்தாவாகவிருந்தகல்லுண்டாய் உப்பள அதிபர் சிறி. ரி. இராமநாதனுக்குவடபகுதிஉப்பளமுகாமையாளர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## அபின பறி முதல்

வல்வெட்டித்துறை செவ்.

வல்வெட்டித்துறை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்திரு விஜயதிலகாகான்ஸ்டபிள்கள் அபயரத்தின, ஹட்ஸ் இராசையா ஆகியோர் அடங்கிய பொலிஸ் கோஷ்டியொன்று வல்வெட்டித்துறையை அடுத்துள்ள கம்பர்மலையில் சின்னையா என்பவருடைய வீட்டைச் சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டபோது 8இரு அபின் அங்கு இருக்கக்காணப்பட்டதாம். சந்தேகத்தின் பேரில் சொலமன் இராசையா, தர்மராசா பெரேரா ஆகிய நால்வரையும் பொலிசார் கைதுசெய்துள்ளனர். அபின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட நால்வரும்பருத்தித்துறைமாஜிஸ்திரேட் திரு.கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது மாஜிஸ்திரேட் அவர்களை இம்மாதம் 24-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

**புதன் 21 - 6 - 67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 உரைச்சித்திரம்—நாகபூஷணிஅம்மன், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்தநின வாழ்த்துக்கள், 5-30 ஓடி விளையாடு பாப்பா.

இரவு 6-15 பாட்டு - சரஸ்வதி ராஜேஸ்வரன், 7-15 வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 வாத்திய இசை, 10-00 நேயர் விருப்பம்.

## பாராட்டு விழா

கோப்பாய், செவ்.

திரு. கந்தையா வைரவநாதன் புதிய சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதையிட்டு கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலைய முன்றலில் திரு. செ. சோமசுந்தரம் தலைமையில் பாராட்டு விழாவொன்று நடைபெற்றது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**உடுவில் கொலைமுயற்சி வழக்கு**

# "ஊமையை தாக்கியது பாரதூரமான குற்றம்"

## எதிரிக்கு 10 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், புதன்
உடுவில் கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதியரசர் வி. தென்னக்கோன் தொகுப்புரை நிகழ்த்தினர். அதன் பின் ஜூரி சபையினர் தனிமையில் சந்தித்து மந்திராலோசனை செய்த பின் எதிரி கொலை முயற்சிக்கு குற்றவாளியென ஏகமனதாகத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து நீதியரசர் 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தார்.

இவ்வழக்கில் 65-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் திகதி உடுவிலில் ஊமையான வல்லி ஐயம்பிள்ளையை, தவசி கந்தையா என்பவர் கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ. அன்ரனி நியமிக்கப்பட்டிருந்தார்.

எதிரி திருமணமானவர் என்றும் 5 குழந்தைகளுக்குத் தந்தையாக இருக்கின்றாரென்றும், எதிரியின் வழக்கறிஞர் நீதியரசரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

"வாய்பேச முடியாத ஊமையை, அவர் உமக்கோ உமது குடும்பத்திற்கோ எவ்வித கெடுதியும் செய்யாமலிருந்த போதும், ஒழுங்கையால் சென்றுகொண்டிருந்த போது அவரை தாக்கியது பாரதூரமான குற்றமாதலால், அதற்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கிறேன்" என்று நீதியரசர் தெரிவித்தார்.

## வேலை நேரமாற்றம் வாபஸ்

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாண மாநகர சகாதார அதிகாரி, நகரசுத்தித் தொழிலாளரின் மதிய போசன இடைவேளையிலும் வீடு திரும்பும் நேரத்திலும் செய்த மாற்றம் வாபஸ் பெறப்பட்டது. இதுசம்பந்தமாகத் தேசிய ஊழியர் சங்கப் பிரதிநிதி திரு. த. குணரத்தினம் மாநகரசபை ஆணையாளரைக் கண்டு பேசி இப்பிரச்னையை இம்மாதம் 20ந் திகதிக்கிடையில் தீர்த்துவைக்க வேண்டுமெனக் கேட்டிருந்ததைத் தொடர்ந்து, விசேஷ ஆணையாளர் திரு. நடேசனின் தலையீடு காரணமாகத் தொழிலாளரின் வேலைநேர மாற்றம் வாபஸ்பெறப்பட்டது.

## மீன்பிடிக் கூட்டுத்தாபன அதிபர்

கொழும்பு, செவ்.
திரு. டி. கே. சுப்பிரமணியம் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் ஜெனரல் மனேஜராகவும், பிரதம நிர்வாக அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## $2\frac{1}{2}$ லட்ச ரூபாய்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
கொண்டு 14 மைல் தூரம் வரை சென்றபோது பிரதான வீதியைவிட்டு கார் திடீரென ஓர் ஒடுக்கமான ஒழுங்கைக்கு ஊடாகச் சென்றபோது சுங்க அதிகாரிகள் சென்ற ஜீப்வண்டி அந்த ஒழுங்கைக்கு ஊடாகச் செல்லமுடியாது இருக்கவே தொடர்ந்து சென்று காரை பிடிக்கமுடியாமல் போய்விட்டதாம் சுங்க அதிகாரிகள் அதனைத் தொடர்ந்து மணற்காட்டுக் கடற்கரையில் வைத்துசில கடத்தல் பொருள்களைக்கைப்பற்றியதாகவும் அவ்விடத்தில் வைத்து ஆறுபேரைக் கைது செய்ததாகவும் பின்னர் குடாரப்பு கடற்கரையில் வைத்து 2 கட்டு ஜவுளிகளைக் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது. நபர்களைக் கைது செய்வதற்கு சுங்க இலாகாவினருக்கு இராணுவத்தினரும் உதவியளித்தனராம். கடலில் ரோந்து சுற்றிய கடற்படையினர்ஒரு வள்ளத்தை துரத்திச்சென்ற சமயம் வள்ளத்திலிருந்தவர்கள் மணற்காட்டு கடற்கரையில் வள்ளத்திலிருந்து குதித்து, நீந்தித் தப்பிச்சென்றுவிட்டனராம். வள்ளத்திலிருந்து சில பொருட்கள் கைப்பற்றப்பட்டனவாம். 50, 000 ரூபா பெறுமதியான வள்ளமும் பறிமுதல் செய்யப்பட்டது. கைதுசெய்யப்பட்ட சிலரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சில தஸ்தாவேஜுகள் வள்ளத்திலிருந்து வந்த பொருட்கள், யார் யாருக்குரியவையென விசாரணையினபோது கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

## 2'11" அங்குலம் மட்டும் 'மேலிடத்து ஆர்டர்'

யாழ்ப்பாணம், செவ்.
யாழ்ப்பாணம் சாட்டுக்கந்தோரில் இரண்டு அடி பதினொரு அங்குலம் அளவான மரம்மட்டும் ஒருவருக்கு வழங்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. இதனால் வீடுகட்டுபவர்களும், தச்சுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத்தெரிகிறது இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களை 'விசாரித்தால் மேலிடத்துஆர்டர்' என்கிறார்களாம்.

2-வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] ஈரோஸ் [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] மொடேர்ன் [பதுளை]
மொடேர்ன் [பண்டாரவளை] விஜிதா [ஹட்டன்] தீவொளி [நுவரெலியா]
கல்யாணி [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் சிவாஜி கணேசன்,
நடிக ராணி கே. ஆர். விஜயா,
ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,
நாகேஷ்



வி. கே. ஆர். பிக்சர்சின்
செல்வம்

## 'சமரசஞானக்கோவை' 28-ந் திகதி வெளியீடு

நாவலப்பிட்டி, செவ்.
'சமரச ஞானக் கோவை' என்னும் நூல் இம் மாதம் 28-ம் திகதி வெளியிடப்படவிருக்கிறது. திரு. க. இரமச்சந்திரா எழுதிய இந் நூல் யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கம் தலைமையில் வெளியிட்டு வைக்கப்படும். கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜெகந்நாதன் விழாவில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். திரு. ச. அம்பிகைபாகன் வரவேற்புரை கூறுவார் திரு. மா. கனகசபை முதற்பிரதி வாங்குவார்.

மாலை 5 மணிக்கு வண்ணை சிவன் கோவிலில் வழிபாடு முடித்த பின்னர் சிவன் கோவில் வீதி வழியாக கூட்டுவழிபாட்டுடன் விழாமண்டபம் சேர்ந்த பின்னர் விழா ஆரம்பமாகும். இவ்விழாவில் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள், பிரம்மஸ்ரீ ரி. கே. சீதாராமசாஸ்திரிகள், திரு. கே. பி. ஹரன், முதலியார் செ. சின்னத்தம்பி, முதலியார். சி. முத்துத்தம்பி ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

## முற்றுகை நீங்கியது

புதுடில்லி, ஜூன் 20
சீனுவிலுள்ள இந்திய தூதரகத்தைச் சுற்றி செங்காவலர் நடத்தி வந்த முற்றுகை இன்று பிற்பகல் நீக்கப்பட்டதாக செய்தி கிடைத்துள்ளது.

## யாழ். மாநகர...

1-ம் பக்கத் தொடர்ச்சி)
மந்திரியின் ஆலோசனையின் பேரில் யாழ்ப்பாண மாநகர சபையின் தேர்தல் நடத்துவது பற்றி முடிவுசெய்யப்படுமென்றும் மந்திரி கூறினர்.

ஜூலை மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் பற்றிய அறிவித்தல் வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கூட்ட நிகழ்ச்சிகள் . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
கேள்வியொன்றுக்கு ராஜாங்க மந்திரி பதிலளித்தபோது தமிழில் செய்யப்படும் புகார்கள் சில பொலிஸ் நிலையங்களில் தமிழிலேயே பதிவதற்கு தற்போது சங்கடங்கள் இருப்பதாகவும் எந்த மொழியில் புகார்கள் செய்யப்படுகின்றனவோ அந்த மொழியிலேயே கூடியவரை அவை பதிவதற்கு இப்போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வருவதாகவும் கூறினர்.

## நாட்டிலும நகரிலும

4ம் பக்கத் தொடர்ச்சி]
மல் போகிறவர்கள், லைசென்ஸ் இல்லாமல் ஓடுகிறவர்கன்-இவர்கள் எல்லோரையும் நிறுத்தி, பெயர் விலாசங்களைக் குறித்து அவர்கள்மீது வழக்குத் தொடர வேண்டுமென்றுதான் சட்டம் இருக்கிறது. இப்படிச் செய்வதானல் நமது பொலிஸ்காரருக்கு வேறு வேலை தேவையில்லை.

அதற்காக இப்படி அநாகரீகமாக தண்டனை வழங்குவது சரியா?

பொலிஸ்காரருக்கும் பொதுமக்களுக்குமிடையே சௌஜன்யமான உறவுகள் நிலவ வேண்டுமென்று பொலிஸ் மேலதிகாரிகள் வற்புறுத்திவரும் சமயத்தில் பொலிஸார் இவ்விதம் நடந்து கொள்வது விந்தையாயிருக்கிறது.

—வழிப்போக்கன்.

நியூ காலிங்கன் [இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
தியாகராஜ பாகவதர்
நடித்த
சிவகாமி

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
தங்கத் தம்பி

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
ஜெமினி, நாகேஷ்வரராவ்
சாவித்திரி
நடித்த
மனிதன் மாறவில்லை

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
TAE SPY WITH MY FACE

## பௌர்ணமி கலைநிகழ்ச்சி

யாழ்ப்பாணம், புதன்
பௌர்ணமி தினத்தையொட்டி யாழ்ப்பாணம் மாநகரசபையினர் இன்று மாலை 6-30 மணி தொடக்கம் நடத்தவிருக்கும் கலைநிகழ்ச்சிகளில் கொழும்பு கலையரசு நாடகமன்றத்தினரின் 'சிரிப்பு நாடகம்' வதிரி நாடக கலாமன்றத்தினரின் 'ஆத்மலிங்கம்' - என்னும் புராண நாடகம், சுதுமலை முத்தமிழ் மன்றத்தினரின் 'புரூக்கர் சரவணை' என்ற நாடகம் ஆகியன இடம் பெறும்.

## வர்த்தகக் கல்வி . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
படுத்தி பரப்பும் பொறுப்பு இப்போதைய இந்திய ஜனாதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசெயினிடமும் திரு. அரியநாயகத்திடமும் விடப்பட்டது.

திரு. அரியநாயகம், அமெரிக்கா, ரஷ்யா உட்பட உலகநாடுகள் பலவற்றுக்கும் சென்று வந்திருக்கிறார். காந்திஜியுடன் சேவாக்கிராமத்திலும் வாழ்ந்து பணியாற்றியிருக்கிறார்.

திரு. அரியநாயகத்தின் ஈமச்சடங்குகள் இன்று வட்டுக்கோட்டையில் நடைபெறுகின்றன.

## 600 'பெல்'கள் இருந்தனவாம்

### 4000ரூபாஅபராதம்

வல்வெட்டித்துறை, செவ்.
யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ளஒரு ஸ்தாபனத்தில் நேற்று யாழ்ப்பாண சுங்கஅதிகாரி திரு. அந்தனிராஜா தலைமையில் சென்ற கோஷ்டியினர் சோதனையிட்டபோது இந்தியாவிலிருந்து கடத்தப்பட்டதாகக்கருதப்படும்600 பெல் [சைக்கிள்மணி]களைக் கைப்பற்றினர். சுங்க கலெக்டர் விசாரணைசெய்தபின் ஸ்தாபன உரிமையாளருக்கு 4000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தேவை

'சேல்ஸ் கேள்'
தேயிலையை வானிற் சென்று விற்பனை செய்வதற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. சம்பளம்: நாள் ஒன்றுக்கு ரூபா 5/-ம் கமிஷனுமுண்டு. 22, 23-6-67 திகதிகளில் காலை 10 மணிக்கு நேரில் வரவும். டாட்டா தேயிலை கம்பனி, சேவிஸ் ஸ்டேசன் பின், சுன்னுகம். 2464

## மரண அறிவித்தல்

ஸ்ரீ எட்வின் வில்லியம்ஸ் அரியநாயகம், சேவாக்ரம், வர்தாவை (இந்தியா) ச்சேர்ந்த ஸ்ரீ எட்வின் வில்லியம்ஸ் அரியநாயகம் காலமாகிவிட்டார். இவர் ஆஷாதேவியின் அருமைக் கணவரும், மித்துகோஷின் தந்தையும், காலஞ்சென்ற வண. பிதா E. T. வில்லியம்ஸ் தம்பதிகளின் மகனும், செல்வம், முத்தம்மா சான்டேர்ஸ், சவுந்தரம், காலஞ்சென்ற திருமதி சொர்ணம்மா செல்லையா ஆகியோரின் சகோதரருமாவார். ஈமச்சடங்குகள் வட்டுக்கோட்டையில் புதன் கிழமை காலை 8 மணியளவில் நடைபெறும். 2465

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org